**பாணந்துறை நகர சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாணந்துறை நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள பாணந்துறை நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் தயாரிக்கப்படாதிருந்தமை பின்வரும் விடயங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டன. | | |
| (அ) ஆண்டிற்கான மிகை ரூபா 37,752,935 ஆக இருந்த போதும் காசுப்பாய்ச்சல் கூற்றில் மிகையாக திரண்ட நிதியம் மற்றும் ஒதுக்க | வழுவொன்று ஏற்பட்டதை அறியத்தருகின்றோம். மீண்டும் தயாரிக்கப்படுகின்ற காசுப் பாய்ச்சல் கூற்றில் | காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆண்டின் மிகை சரியாக காண்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்குகளில் ஆண்டின் ஆரம்ப மற்றும் இறுதி வேறுபாடான ரூபா 62,530,561 தொகை காண்பிக்கப்பட்டதன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சல் ரூபா 24,777,626 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரிசெய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | ஆண்டின் போது ஆதனங்கள், பொறிகள் கொள்வனவு செய்தலின் பெறுமதி ரூபா 6,922,737 ஆக இருந்த போதும் அது ரூபா 18,061,149 ஆக காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டதன் காரணமாக முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சல் 11,138,412 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | மீண்டும் தயாரிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றில் அப்பெறுமதி சரியாக காண்பிக்கப்பட்டுள்ளது. | ஆண்டின் போது ஆதனங்கள் மற்றும் பொறிகள் கொள்வனவு செய்தலின் பெறுமதி சரியாக காண்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | மூலதன ஒதுக்கத்தின் அதிகரிப்புக்களில் காசுப்பாய்ச்சல் உருவாகாதிருந்த போதிலும் ஆண்டின் போது இருப்பு மற்றும் ஒதுக்க கணக்கில் ஏற்பட்டிருந்த ரூபா 24,777,626 அதிகரிப்பு நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | மீண்டும் தயாரிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றில் அப்பெறுமதி அகற்றப்பட்டுள்ளது. | மூலதன ஒதுக்கம் அதிகரித்தமை காசுப்பாய்ச்சலாக காண்பிக்க முடியாது. |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்படாத 21 செயற்திட்டங்களுக்காக ரூபா 14,001,835 கடன்கொடுத்தோர் ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. | இந்த செயற்திட்டம் நடைமுறை வேலையாக கருதி கடன்கொடுத்தோர் ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | வேலை ஆரம்பிக்கப்படாத செயற் திட்டங்களுக்காக கடன்கொடுத்தோர் ஒதுக்க முடியாது |
| (ஆ) | 07 மடி கணனிகள், 01 நிழற்பட பிரதி இயந்திரம், 01 லேசர் பிறிண்டர் என்பவற்றை கொள்வனவு செய்வதற்காக 2020 திசெம்பர் 23 ஆந் திகதிய தொழில்நுட்ப | அத்தியவசிய மற்றும் குறிப்பாக கிடைக்க வேண்டிய உபகரணங்களாக இருந்தமையால் கடன்கொடுத்தோர் | உடன்படிக்கை களில் கைச்சாத்திடப்படாத வழங்கல்களுக்காக கடன்கொடுத்தோர் ஒதுக்கீடு செய்ய |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீட்டுக் குழு அறிக்கையின் மூலம் தகுதியுடைய வழங்குனர் பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த வழங்குனரிடம் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படாதிருந்த போதிலும் அதற்காக ரூபா 1,172,000 கடன்கொடுத்தோர் ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அப்பெறுமதி நடைமுறை வேலையின் கீழும் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | முடியாது. |
| (இ) | ஆண்டில் இருப்புக்களை கொள்வனவு செய்தல், விநியோகித்தல், அகற்றுதல் மற்றும் பொருள் மெய்மையாய்வின் பிரகாரம் மிகை மற்றும் பற்றாக்குறை பெறுமதி தனித்தனியாக கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் மேற்கூறப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் தேறிய விளைவான ரூபா 828,849 தொகை வருட ஆரம்ப இருப்பு மற்றும் இறுதி பௌதீக இருப்புக்களுக்கிடையேயான வேறுபாடாக பொதுக் களஞ்சிய கணக்கு வரவு வைத்து உரிய செலவினக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | வழுவினால் இது ஏற்பட்டிருந்தது. எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) | ஆண்டின் இறுதி பொருள் மெய்மையாய்வின் போது ஆயுர்வேத மருந்து இருப்பு மெய்மையாய்வு செய்யப்படாதிருந்ததுடன் ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தரின் அறிக்கையின் பிரகாரம் அந்த இருப்பின் பெறுமதி ரூபா 325,179 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இருப்பை சான்றுறுதிப்படுத்தி கணக்கீடு செய்யப்படும். | இருப்பை சான்றுறுதிப்படுத்தி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் மூலம் அகற்றுவதற்கு பரிந்துரை | பிரயோக ரீதியிலான பிரச்சினைகளால் பொருட்களை பௌதீக ரீதியில் அகற்றுவதில் | பௌதீக ரீதியில் அகற்றப்படாமையால் புத்தகங்களிலிருந்து |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்த ரூபா 1,519,129 இருப்பின் பெறுமதி பௌதீக ரீதியில் அகற்றப்படாதிருந்த போதிலும் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. | தாமதம் ஏற்பட்டிருந்ததுடன் விரைவாக அதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | பதிவழிக்க முடியாது. |
| (ஊ) | 2018 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட ரூபா 2,955,000 கிரயமான கணனி மென்பொருள் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் முழுமையான செயற்படு நிலையில் காணப்படாதிருந்ததுடன் அப்பெறுமதியில் ரூபா 1,222,833 தொகை அடிப்படையின்றி அகற்றப்பட்டிருந்தது. அதனால் சொத்துக்கள் ரூபா 1,222,833 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | கணனி மென்பொருள் குறைந்து செல்லும் அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்து அகற்றப்பட்டுள்ளது. | மீள்மதிப்பீட்டின் போது பெறுமானத்தேய்வு வீதத்தை அடிப்படையாகக் கொண்டு சொத்துக் களிலிருந்து அகற்றுதல் முடியாது. |
| (எ) | கஹட்டகஹவத்த, கெட்டகேலகஹவத்த மற்றும் குணுகொட்டுவ வத்த என்ற 03 காணிக் கூறுகள் சபைக்கு உரித்தாக இருந்த போதும் அந்த காணிகள் பட்டோலைகளிலும், சொத்துக் கணக்குகளிலும் கைவிடப்பட்டிருந்தது. | தாமத வழுவினால் கைவிடப்பட்டிருந்ததுடன் பின்னர் காணி பட்டோலையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | சபைக்குச் சொந்தமான சொத்தாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 6,009,507 கூட்டுத்தொகையான 05 கணக்கு விடயங்களுக்குரிய கணக்காய்வுக்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் உரிய பதிவேடுகளை சமர்ப்பிப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கணக்கீட்டு மீதியை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 37,752,935 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 7,469,855 ஆகும்.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் ஒட்டுமொத்த ஆதனவரி நிலுவை ரூபா 35,601,703 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான நிலுவை ரூபா 3,135,812 மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை ரூபா 3,187,850 ஆகும். | 2021 மே 30 ஆந் திகதி வரையில் நிலுவை மீதியின் ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்படல் வேண்டும். |